

# பரலோக பொக்கிஷங்கள்

மேலானவைகளையே நாடுங்கள்! (கொலோசெயர் 3:2)

**எந்த துன்பத்திலும், ஒரு கிறிஸ்தவன் சோர்ந்து போவதில்லை!**

இவ்வுலக மாந்தர்களுக்கு நாலாபக்கமும் நெருக்கங்கள் ஏற்படும்போது, ஒடுங்கிப்போய் மனமுறிவு அடைந்து விடுகிறார்கள்! அல்லது, பலரால் புறக்கணிக்கப்படும் துன்பம் ஏற்படும்போது, தாங்கள் கைவிடப்பட்டதைப்போல் வேதனை அடைகிறார்கள்! இன்னும் அதிகமாய் கீழே தள்ளப்படும் அவமானங்கள் ஏற்படும்போது, மடிந்தே போகிறார்கள்!

ஆனால், இவை அனைத்தும் ஓர் உத்தம கிறிஸ்தவனுக்கு நேரிடும்போது, அவன் உலக மாந்தர்களைப்போல், மனமுறிவு அடைவதில்லை! கைவிடப்படுவதில்லை! நம்பிக்கை இழந்து மடிந்து போகிறதும் இல்லை! என, 2கொரி.4:8,9 கெம்பீரமாய் கூறுவதைப் பாருங்கள். ஏனெனில், இந்த எல்லா சமயங்களிலும் நாம் பெற்ற "தேவ இரக்கம்" நம்மை சோர்ந்து போகச் செய்வதில்லை என்றும், (2கொரி.4:1) மேலும் துன்பங்கள் அனைத்தும் அவனுக்கு 'புறம்பே' சம்பவித்தாலும், அவனது 'உள்ளான மனுஷனின்' மனம் முறிவடைந்து போவதில்லை எனவும் (வசனம்.16), கூறுவதைப் பாருங்கள்! ஏனெனில், அவன் கிறிஸ்தவன்!

*-tr*

பெட்டகம் 40 ஆகஸ்ட் பரல்கள் 8
2024



## சிறை செல்லவும் அஞ்சாத ஊழியர்கள் எங்கே?

ஊழிய சகோதரனே, முன்பு வாழ்ந்த பரிசுத்தவான்களும், மிஷனரிகளும், இரத்த சாட்சிகளும், சத்தியவான்களுமாகிய மார்ட்டின் லூத்தரை, ஜான் பனியனை, வெஸ்லியை..... நேசிக்கிறோம் என ஒருகாலத்தில் கூறினீர்கள் அல்லவா? அவர்களின் சுயசரிதை மடல் எழுதி வாழ்த்தினீர்களல்லவோ? அவர்களின் நினைவு வாசக புகைப்படங்களை கொண்டு உங்கள் இல்லத்தை அலங்கரித்தீர்களல்லவோ?...... அப்படியெல்லாம் செய்துவிட்டு, அவர்களின் அடிச்சுவடில் நடக்க மாத்திரம் செய்யவில்லையே!

அவர்களின் தியாக நன்மையான விளைவுகளை, அவர்களின் கடைசி இரத்த துளியிலும் பெற்றுக் கொண்டோம்..... ஆனால், நம் சொந்த இரத்தத்தின் ஒரு துளியும் சிந்திவிடாதபடி தன்னை பாதுகாத்திட நாடுகிறதே இன்றைய கோழையான ஊழியகளம்! அன்றுள்ள ஊழிய களத்தைவிட இன்றுள்ள ஊழியகளம் மகா கொடிது! அன்று, பாவத்தை கண்டித்த யோவான்ஸ்நானகனை சிறையில் அடைக்க, ஆறுமாதங்கள் மேல் தாமதமாயின! அந்த யோவான்ஸ்நானகன், அந்த எலியா, இன்றைய நம் தெருக்களில் "பாவத்தை கண்டித்து பிரசங்கித்தால்" 6 - மாதங்களுக்குப் பிறகு அல்ல..... 6-வாரத்திற்குள் சிறையில் அடைபட்டு சித்திரவதைக்கு ஆளாவார்கள்!! அந்த தூயவான்களைப்போல் பாவத்தை 'பகிரங்கமாய்' கண்டித்து பிரசங்கிக்கும் உத்தம ஊழிய தீரர்கள் இன்று எங்கே? அவர்களுக்கே, நம் தேசம் காத்திருக்கிறது! ஆமென்.

*-Ed*

### 2024 'பரலோக பொக்கிஷங்கள்' சந்தா புதுப்பிக்கவும்

வருட சந்தா ரூ.170/- தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு ஆகஸ்ட் 20-ம் தேதிக்குள் அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் 'புதிது' என்று குறிப்பிடவும். நன்றி!

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்)
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 3585200
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## ஜெபத்திற்கு பதில் தாமதிக்கிறதோ? ஓர் போதனை கேளுங்கள்!

*தம்முடையவர்களின் ஜெபத்தை, கர்த்தர் கனப்படுத்துவார்*

நாம் 'இடைவிடாமல் ஜெபிப்பதற்கு' கட்டளையிடப் பட்டதற்குரிய நோக்கம் ஒன்று உண்டு. அதுஎன்னவெனில், ஜெபத்திற்குரிய பதிலை நாம் பெறுவதற்குரிய கால தாமதமே யாகும். அந்த தாமதம் தேவனுக்கும் நமக்கும் இடையே காணப் படும் பொல்லாத ஆவிகளின் போராட்டமாகவும் இருந்திட முடியும் என்றே வேதம் நம்மை விழிப்பூட்டுகிறது! எனவேதான், நாம் தொடர்ந்து ஜெபித்திடும் ஜெபத்தை நிறுத்திவிடக்கூடாது!

உதாரணமாய் தானியேல் ஒரு முக்கிய விஷயத்திற்காக 21-நாட்கள் உபவாசித்து தொடர்ந்து ஜெபித்தான். அதாவது, அவனது ஜெபம் 21- நாட்கள் நீடித்துக்கொண்டே போனது. பதில் வரவில்லை! அதற்கு காரணம், தானியேல் நல்லவன் அல்ல என்பதோ அல்லது அவனது ஜெபம் தேவ சித்தத்தின்படி அல்ல என்பதோ கிடையாது! அப்படியிருக்க தாமதம் ஏன் என்றால், வான மண்டலத்தில் சாத்தான் நிகழ்த்திய போராட்டமேயாகும்.

> "இந்த நீண்ட நாட்கள் போராட்டத்தில் 'ஜெபத்திற்கு பதில் தாமதமாவதைக் கண்டு' தானியேல் மனச்சோர்வடைந்து, மடிந்து போக வேண்டும் என்பதே சாத்தானுடைய நோக்கமாகும்!

ஆனால், தேவன் தம்முடையவர்களை 'திராணிக்கு மிஞ்சி சோதிக்கப்பட இடங்கொடார்'.

எப்படியெனில், ஒரு தூதன் தானியேலுக்கு முன்பாகத் தோன்றி "தானியேலே, பயப்படாதே.... நீ தேவனுக்கு முன்பாக உபவாசித்து ஜெபித்த முதல் நாளிலேயே உன் வார்த்தைகள் கேட்கப்பட்டன! அந்த செய்தியை உனக்குச் சொல்வதற்காக நான் உன்னிடம் வந்தபோது, பெர்சியா இராஜ்ஜியத்தின் அதிபதி எனக்கு இடையூறாக வந்து நின்றான்" என அந்த தூதன் கூறினார் (தானி.10:12,13).

இதைக் கேட்டீர்களா, தானியேல் ஜெபம் பண்ணத் தொடங்கின அந்த நாளிலேயே கர்த்தர் அவனுடைய ஜெபத்திற்கு

விடையை அருளி தந்தார். "உன் ஜெபம் கேட்கப்பட்டது" என்ற நற்செய்தியை தானியேலுக்கு அறிவித்திட அனுப்பட்ட பரம தூதனை மற்றொரு வீழ்ச்சியடைந்த தூதன் இடைமறித்து "ஜெபத்திற்குரிய பதில் தானியேலிடம் சேராதபடி" யுத்தம் செய்தான்! இவ்வாறு "வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளோடு நடந்த போராட்டம்" (எபே.6:12) பூலோகத்திலும் தானியேலுக்கு பாதிப்பை கொண்டுவர முயற்சித்தது! அந்த சரியான நேரத்தில், தூதன் அவரை சந்தித்து நடந்த சம்பவத்தை விவரித்துக் கூறினான்.

> **"இது ஓர், ஜெபத்தைக் குறித்த நல்ல போதனையாகும். "சாத்தான் மூலமாய் ஜெபத்திற்கு தடங்கல் அல்லது தடைகள் ஏற்பட முடியும்" என்பதை நீங்கள் அறிந்து கொள்வதே அந்த போதனையாகும். ஜெபத்திற்குரிய பதில், 3-வார தாமதத்தின் காரணத்தை கேட்டறிந்த தானியேல் மனநிறைவு கொண்டான்!**

இன்றும் அநேக கர்த்தருடைய ஜனங்களுக்கு 'ஜெபத்திற்கு தாமதம்' என்ற போராட்டம் இருக்கத்தான் செய்கிறது. **நீங்களோ உங்கள் ஜெபத்திலிருந்தும் விசுவாசத்திலிருந்தும் சிறிதேனும் விலகாதிருந்தால்,** புதுவெள்ளம் போல் தேவன் தமது பதிலை பொங்கிவழியச் செய்வார்! அதோடு சேர்த்து நீங்கள் எதிர்பாராத புதிய ஆசீர்வாதங்களையும் வழங்கி, உங்கள் ஜெபத்தை கனப்படுத்துவார்!

பாதாளம், தன்னால் இயன்ற எல்லா தீங்குகளையும் கர்த்தருடைய ஜனங்களுக்கு கொண்டுவர முயற்சித்துக் கொண்டே இருக்கிறான்! அதுவும் 'கர்த்தருக்குப் பிரியமான பரிசுத்தவான்களை' பன்மடங்கு 'அக்கினி சூளையின்' கொடூரத்தை கொண்டு வந்து கொட்டுகிறான்! இவை அத்தனை மத்தியிலும், பரலோகம் அவர்களை ஒருநாளும் கைவிடுவதில்லை! ஆமென்.

*- Mrs.சார்லஸ் கஃவ்மென்*

---

## 'விசுவாசம்' இல்லாத வேத பண்டிதமா? அது, அபாயம்!

*வேதம் திவ்வியமான விசுவாசப் பெட்டகம்*

**ம**கத்துவமாய் எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையை "அற்ப சிறியதாய்" மாற்றும் அபாயத்தையே, இன்று அனேகர் கையாளுகிறார்கள். என்னுடைய 87-வருட பரிசுத்த வாழ்க்கை அனுபவத்தில், பெரும்பாலான கிறிஸ்தவ போதகர்கள் அவிசுவாசத்திற்கே 'வேத பண்டிதர்களாய்' இருக்கிறார்கள்! இதை வேத வாக்கியங்களில் இயேசு குறிப்பிட்டு, **அற்ப விசுவாசிகள்**

*என்றும், எழுதப்பட்டவைகளை* **விசுவாசிப்பதற்கு மந்த இருதயம்** *கொண்டவர்களென்றும்! குறிப்பிட்டார். மின்சார ஓட்டத்தை அதிகப்படுத்த, ஓர் பெரிய மின்சக்தி தூணை நிறுவுவார்கள்! நான் கண்ட உண்மை என்னவென்றால், அநேகருடைய இருதயத்தில் 'மின் சக்தி குறைப்பு இயந்திரமே' பொருத்தப்பட்டு இருக்கிறது. தங்களுக்குள் இந்த இயந்திரம் 'தானாகவே கிரியை செய்கிறது' என்பதை அனேகர் சிறிதுகூட அறியாமலிருக்கிறார்கள்!*

*எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தைகள் முழு வல்லமையும்! முழு மகிமையும்! நிறைந்தது. இத்தனை மகத்துவமான தேவனுக்குரியவைகளை ஒருவன் குறைக்க நினைப்பது எவ்வளவு பெரிய தவறு. இன்று அனேகர், தாங்களே அறியாமல் வேத வாக்கியத்தின் வல்லமையை பெலவீனப்படுத்தி விட்டார்கள்! ஒருவகையில் கூற வேண்டுமென்றால் இன்று ஜனங்கள் வேத வசனத்தை நிறுத்தி, நிதானமாய் வாசிக்கவில்லை என்றே கூற வேண்டும்.*

> “ **நீங்களோ “அப்படியெல்லாம் இல்லை! எங்கள் மத்தியில் சிறந்த வேத பண்டிதர்கள் இருக்கிறார்கள்” என்றல்லவா கூறுகிறீர்கள். அவர்களை வேத பண்டிதர்கள் இல்லை என்று யார் கூறினார்கள்? அவர்கள் இருதயத்திலிருக்கும் 'குறைப்பு இயந்திரம்' விசுவாசத்தை வெகுவாய் குறைத்துவிட்டதே!**

*ஆம், விசுவாசம் இல்லாமல் எதுவுமே நடக்காது.... விசுவாசம் இருந்தால் மாத்திரமே அதற்கேற்ற கிரியைகளும் நடைபெறும்! சரி பரவாயில்லை, இனி முயற்சித்துப் பார்க்கிறேன் என நீங்களாகவே கூறுவதெல்லாம் 100% அவிசுவாசம்!*

*உதாரணமாய், சில வசனங்களை கவனியுங்கள். எபேசியர் 4:1,2 கூறும்போது “நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த (All) மனத்தாழ்மையும் (All) சாந்தமும்....” உடையவர்களாயிருங்கள் என்று எல்லோருமே வாசிக்கிறோம். அப்படியானால்* **'சகல' தாழ்மையும்! 'சகல' சாந்தமும்** *என்றல்லவா பொருள்படுகிறது! இதை அப்படியே விசுவாசிக்கிறவர்கள் எத்தனை பேர்? அவ்வாறு விசுவாசித்திருந்தால் இந்த வசனம் அவர்களுடைய இருதயத்திற்குள் கிரியை நடப்பித்திருக்கும். அந்த கிரியையின் விளைவாய் கொஞ்சம் தாழ்மையை பெற்ற யாவரும், கொஞ்சம் கிருபையும் பெற்றிருப்பார்கள்! இன்னும் அதிகமாய் தாழ்த்தியவர்கள் அதிக கிருபையை பெற்றிருப்பார்கள்! தாழ்மையை உடையாகவே உடுத்தியிருந்தால் என்ன சம்பவிக்கும்? விடையை*

இப்பொழுது அறிந்து கொண்டீர்கள்..... **ஆம் "சகல கிருபையும் அந்த நபர் பெற்றுக்கொள்வார்!"** அல்லேலூயா. நாம் பாவ மன்னிப்பை பெற்றபோது அடைந்த ஆரம்ப கிருபை அல்ல! இது, கிறிஸ்துவைபோல் மாறும் வளர்ச்சிக்குரிய கிருபை! இந்த கிருபை வழங்கும் செல்வங்கள் ஏராளம்: ஏற்ற சமயத்தில் உதவி! இக்கட்டில் இரட்சிப்பு! முன்னேறி செல்ல நடத்தும் வெளிச்சம்! பெலவீன நேரத்தில் வல்லமை! இவ்வாறு நம் 'எல்லா தேவைகளுக்கும்' போதுமானதே இந்த கிருபை! இத்தனை பெரிய மகத்துவத்தை திரளான கிறிஸ்தவர்கள் இன்னமும் விசுவாசித்து அனுபவிக்கவில்லையே! ஆகவேதான், நான் மறுபடியுமாக சொல்லுகிறேன்: "இன்று ஜனங்கள் எழுதப்பட்ட வேத வாக்கியங்களை, நிறுத்தி நிதானமாய் வாசிக்கவில்லை!".

*எல்லா தாழ்மையும்! எல்லா சாந்தமும்! என்பதற்கு தெளிவான அர்த்தம் என்னவென்றால் "ஒருவன் தாழ்மையிலும் சாந்த குணத்திலும் வேரூன்றி நிலைபெற்றிருக்கிறான்" என்ற எளிய விளக்கமேயாகும். இப்போது உங்களுக்கு சத்தியம் எளிதில் புரிந்துவிட்டது! ஆம், தாழ்மையும் சாந்தமுமேயன்றி, அதற்கு புறம்பாய் உங்களால் ஒன்றும் செய்ய இயலாது என்ற அற்புத நிலையேயாகும்! இவ்வித நிலையில் வாழும் உங்களை அல்லது நம்மை அறிந்தவர்கள் யாராயிருந்தாலும், கூடவே இருந்து வாழ்ந்தவர்கள் யாராயிருந்தாலும், இந்த சுபாவங்கள் உங்களில் வாசமாயிருப்பதை எளிதில் அறிந்திருப்பார்கள்! ஆம், இன்று உலகில் அபூர்வமாய் இருக்கக்கூடிய, ஆகிலும் மிக வல்லமையான அந்த திவ்ய சுபாவங்கள் உங்களைச் சுற்றிலும் அனேகருக்கு காணப்பட்டிருக்க வேண்டும்!*

இதற்காகவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம், இதுவே தேவனுடைய பரிபூரண சித்தம்! மெய்யாகவே தேவன் நம்மை அதிகமாய் நேசிக்கிறார், தம்முடைய அனைத்தையும் அதிகமாக கொடுக்க விரும்புகிறார்! நமக்குள் அதிகமாய் கிரியை நடப்பித்து, நம்மை அவரைப்போலவே மறுரூபப்படுத்த விரும்புகிறார்!

> "
> **அதனிமித்தமாய், நாமே 'தாழ்மையாய்' மாறுகிறோம்! நாமே சாந்த குணத்தின் இரண்டு கால்களாய் மாறி, ஜனங்களுக்குள் வாழுகிறோம்! இவ்வித அற்புத கிரியை 'விசுவாசத்தால் மாத்திரமே' நடைபெற முடியும்!**

இந்த தெய்வீக வாழ்க்கைக்கே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை ஒருவன் விசுவாசிக்க வேண்டும்! இது தேவ சித்தம், இது நம்மால் கூடும், இதுவே தேவன் நமக்குத் தந்த பணி! என,

*வேதப்புத்தகத்தில் எழுதப்பட்டதை 'சிறிதும் மாற்றாமல்' அப்படியே* **விசுவாசித்து நடக்கக்கடவோம்.**

*இச்சமயத்தில் நீங்கள் யாவரும் மிக கவனமாய் கைக்கொள்ள வேண்டிய உண்மை என்னவென்றால் உங்கள் இருதயத்தில் வாசமாயிருக்கும் "விசுவாசத்தை குறைக்கும் தானியங்கியை" எடுத்து உங்கள் இருதயத்திலிருந்து தூக்கி எறியுங்கள்! அப்போது மாத்திரமே, இனிமுதற்கொண்டு உங்கள் வாழ்க்கையில் அற்புதம் சம்பவிக்கத் தொடங்கி விடும். ஏனெனில்,* **எழுதப்பட்டப்படியே வாசிக்கவும்! எழுதப்பட்டபடியே அதை விசுவாசிக்கவும்! ஆரம்பித்து விட்டீர்கள்.** *அப்படி சம்பவித்தால், எழுதப்பட்டப்படியே உங்களுக்குள் மறுரூபமாகும் செயல் வல்லமையாய் நடைபெற்றுவிடும்!*

*- எலியாஸ் அஸ்லாக்சன்*

---

## 'பிசாசை எதிர்த்து நிற்கும்' ஊழியர்களே தேவை!

*வீறுகொண்ட கிறிஸ்தவனே, மடங்கிப் போகாதீர்*

தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக நின்று வாழும் அழைக்கப்பட்ட 'தேவ ஊழியர் குழுவில்' மற்றொரு *எலியா* எந்த சமயத்திலும் எழும்பி வந்து விடுவான்! அல்லது தோள் நிமிர்ந்த *தானியேல்* வந்துவிடக்கூடும்! அல்லது சத்தியத்தை கர்ஜிக்கும் *லூத்தர்*..... அல்லது சுவிசேஷப் படைகொண்டு சாத்தானுடைய இராஜ்ஜியத்தைக் கொள்ளையிடும் ஒரு *வில்லியம் பூத்*..... போன்ற **தீவிர கிறிஸ்துவின் வீரர்கள் எந்த நேரத்திலும் எழும்பி வந்து விடுவார்கள் என்பதிலேயே சாத்தான் வெகுவாய் இன்று கலங்கி நிற்கிறான்!**

*தேவனுடைய வார்த்தையை 'ஜெப ஜீவிய' வலிமையோடு, காட்டுத் தீ போல் பரவச் செய்திட்ட* **ஃபின்னி** *அல்லது சாத்தானுடைய கோட்டையை மகா தைரியத்தோடு தகர்த்திட்ட* **எட்வர்ட்ஸ்** *போன்ற ஜெப மாந்தர்கள், ஆகிய இவர்களால் ஏற்படும் அபாயத்தை சாத்தானால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை! இவ்வாறு, நிரந்தர தீவிர எதிரி தனக்கு வந்துவிடக்கூடாது என்பதைத் தடை செய்வதற்காகவே "புதிதாய் இரட்சிக்கப்பட்டவர்களை அழிப்பதற்கு" சாத்தான் துடிதுடித்து நிற்கிறான்!*

> "**ஏனெனில், தனக்கு எதிராய் உருவாகும் கர்த்தரின் தீவிர போர்வீரனை அழிப்பதற்கு சாத்தான் கையாளும் ஒரே உபாயம், அவர்கள் வளருவதற்கு முன்பே அவர்களை அழிப்பதுதான்!**

இஸ்ரவேல் தேசத்தை விடுவிக்கப் **பிறந்த மோசேயை** அழித்திட

அவன் வகை தேடினான்! அவ்வாறாகவே, உலகப் பாவங்களுக்காக மரிக்கும்படி இரட்கராய் **பிறந்த குழந்தை இயேசுவை** வளர விடாமல் தடுக்க முயற்சித்தான்!

"

**ஒன்று, அவர்களை அழிக்க வேண்டும் அல்லது, அவர்கள் வளர்ச்சியை குன்ற வைக்க வேண்டும்! இதுவே, சாத்தான் தன் ராஜ்ஜியத்திற்காக மேற்கொண்டிருக்கும் யுத்தமாகும்!**

இன்றைய நாட்களில், கிறிஸ்தவர்களை சரீரப்பிரகாரமாய் அழிப்பதில் பிரயோஜனமில்லை என்றே சாத்தான் எண்ணுகிறான். ஏனெனில், யுத்தத்தில் மரித்துவிட்ட வீரன், தன் போர் படைக்கு அனல் மூட்டும் 'மாதிரியாய்' மாறி விடுகிறானே! கிறிஸ்துவுக்கு பெருமையும் தேடித் தந்து விடுகிறான்! இதற்கு மாறாக, சத்துருவின் முதல் வெடிகுண்டு சத்தம் கேட்டவுடன், சண்டையிட மறுத்து பின்வாங்கி ஓடுபவனே, 'தன் விசுவாச குடும்பத்திற்கும், தன் இரட்சகருக்கும்' அவமானத்தை தேடித் தருகிறான்! இதுபோன்றவர்கள், சத்துருவின் முகத்திற்கு வெற்றிச் சிரிப்பையும், சர்வ சங்க கிறிஸ்துவின் சபையின் முகத்திற்கு அவமானத்தையும் கொண்டு வந்து சேர்க்கிறார்கள்!

இவ்வாறாகவே, கிறிஸ்துவின் நாமத்தை உச்சரிப்பவர்களின் **ஆவிக்குரிய வலிமையை அழித்து விடுவதில்,** இன்று சாத்தான் ஜெயம் பெற்று கொக்கரிக்கிறான்.

"

**ஒரு சராசரி கிறிஸ்தவ வாழ்க்கையில் அமர்ந்திட்டவர்கள், பிசாசின் சாம்ராஜ்ஜியத்திற்கு 'அச்சுறுத்தல்' கொண்டவர்களல்ல! இவர்கள் கடும் சூழ்நிலையில், ஜெப ஜீவியத்திற்கு உயர எழும்பிப் பறக்க முடியாத 'வியாதியுற்ற கழுகுகள்!'**

இவர்கள், தங்கள் பரதேசீ பயணத்தில், வழியில் பறித்த மாய - லோக மயக்கப் பூக்களை முகர்ந்து, பயணத்தை இழந்து அமர்ந்துவிட்ட கோழை கிறிஸ்தவர்கள்! ஆம், சாத்தான் இவ்விதமாகவே இன்றைய நாட்களில் தன்னுடைய ராஜ்ஜியத்திற்கு 'இவர்களைக் கொண்டு' வெற்றிக்கொடி நாட்டி வருகிறான்!

இன்னும் சிலரை, போதுமான போதனையில்லாத நிலையிலும் அல்லது கள்ள உபதேசங்களிலும் அல்லது உலகத்திற்கு குளிர்ந்து போன கெட்ட மாதிரியான திரள் கூட்டங்களிலும், அல்லது **பெற்றுக்கொண்ட சத்தியத்திற்கு** சமரசம் கண்ட கூட்டங்களோடும், அல்லது கிறிஸ்துவின் வீரத்தை இழந்து விட்டு, கல்வி நிலையங்களையும், ஆஸ்பத்திரிகளையும் நடத்தும் சமுதாய சேவகர்களாக்கி, சாத்தானின் எல்கைக்குள் மீண்டும்

*பிடிக்கப்பட்டுப் போனார்கள்! இன்றைய சபைகளில் அமர்ந்திருக்கும் அனைவரையுமோ அல்லது பாதிப் பேர்களையோ 'வெறும் ஆவிக்குரிய கண்காட்சியாய்' அமரச் செய்து விட்டான் இந்த சாத்தான்!*

> "இவ்வித அரை- குறை மக்களைக் கொண்டு, திரள் கூட்ட பாஸ்டர்கள் திருப்தியாய், தொடர்ந்து 'கண்காட்சி' நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இவ்வித கண்காட்சியாய் அமர்ந்திருப்பவர்களை, தங்கள் லௌகீகமான புன்சிரிப்பினால் "அங்கீகாரம் வழங்கி" அந்த ஆத்துமாக்களை நாசப்படுத்தும் தலைவர்களும் ஏராளம் ஏராளமாய் பெருகிவிட்டார்கள்!

***இ**ன்று சாத்தான் கடும் பகையாய் எதிர்த்து நிற்கும் கூட்டம் ஒரே ஒரு வகையினர்தான்: இவர்கள், கிறிஸ்துவின் உயர்ந்த ஜீவியத்தை இலக்காய் வைத்து முன்னேறுபவர்கள்! எப்போதும் ஆவியில் நிறைந்தவர்கள்! ஆவியில் நிறைந்த வைராக்கிய ஜீவியம் இலகுவானது என மாயமாய் எண்ணிக் கொள்ளாதவர்கள்! இவர்கள் மாத்திரமே சத்துருவின் தாக்குதல் முனையில் நிற்பவர்கள்...... சாத்தானோடு 'கடும் யுத்தம்' இவர்களுக்கு மாத்திரமே உண்டு! ஜெயம் பெற்ற கிறிஸ்துவின் அடிச்சுவட்டில், இவர்கள் தொடர்ந்து மனம் தளராத விசுவாசத்துடன் முன்னேறும் போது....... நிச்சயமாய் **கிறிஸ்து சம்பாதித்த முழு வெற்றியையும்** அடைந்தே தீருவார்கள். ஜெயத்திற்குரியவர்கள் கண்டிப்பாய் ஜெயிப்பார்கள்! அவர்களைக் குறித்து, நான் இங்கே குறிப்பிட வரவில்லை! அதற்கு பதிலாய் ஆவிக்குரிய கடும் போராட்ட வாழ்க்கையிலிருந்து தப்புவதற்கும், இன்றைய கிறிஸ்தவ ஜீவியத்தில் குளிர்ந்து போனவர்களோடு தாங்களும் பின்மாறி அமர்ந்திருக்க தீர்மானித்தவர்களைக் குறித்தே, நான் அக்கறை கொண்டிருக்கிறேன். இதைத்தான், இந்த நாள் வரை சாத்தான் உங்களில் விரும்பியிருந்தான்.*

*கேளும் சகோதரரே, நீங்கள் ஆவிக்குரிய போராட்டத்தை தவிர்த்து அமரப்போகும் இடம் 'வல்லமை - இழந்த' இடம்! கிறிஸ்துவின் ராஜ்ஜியத்திற்கு உங்களின் தீவிர வளர்ச்சியை குன்ற வைத்திடும் இடம்! இருளின் சாம்ராஜ்ஜியத்திற்கு ஆர்ப்பரிப்பை ஏற்படுத்தும் இடம்! இப்படியொரு சமரசம் ஏற்படுத்தும் **ஒத்தவேஷத்திற்கு இணங்குவது நியாயமா?***

*இவ்வித சமரசம், ஆவிக்குரிய போரின் உக்கிரத்தை அணைத்து விடும் என்பதே உண்மை! உங்கள் போரிடும் ஆயுதங்களை துருப் பிடிக்க வைத்திடும் சாத்தானுக்கோ கொள்ளை மகிழ்ச்சி! **போரில் பின்னடைவால் ஏற்பட்ட சமாதானம்....** உங்களை முன்னேற விடாமல்,*

*ஜெயிக்க விடாமல் "தேங்கி நின்று விட்ட - சமாதானம்" என்பதை மறந்து விடாதீர்கள்!*

*நித்திய சுதந்தரர்களோ, 'தேங்கி நிற்க மறுத்து' தீப்பிளம்பின் உத்தம யுத்தத்தில் தொடர்ந்து நிற்பவர்கள்!* **கிறிஸ்துவின் ஜெயக்கொடி ஒன்றே** *தங்களின் கொள்கை என கொண்டவர்கள்! ..... அது, நீங்களாகவே ஏன் இருந்துவிடக் கூடாது? எழுவீர்! பிரகாசிப்பீர்! ஜெயம் பெற்று மகிழ்வீர்! ஆமென்.*

*- A.W.டோசர்*

---

## 'ஒரு ஆத்துமாவை' தூக்கி எடுக்க நடத்திய தேவன்!

*'இழந்த தெய்வ அன்பு' மீட்கப்பட வேண்டும்*

*நீண்ட பயணத்திற்குப் பிறகு, நாங்கள் 'டூரின்' நகரம் வந்து சேர்ந்தோம். வந்தும் வராததுமாய் இருந்த நிலையில், ஜெனிவா பிஷப்* **எங்கள் யாவரையும் அவதூறாய் தாக்கி கடிதம் எழுதினார்.** *அவர் முன்பு எங்கள் மீது வைத்திருந்த விரோதத்தை, வேறு எந்த வகையிலும் தொடர முடியாதபடியால், தன் கடிதங்கள் மூலமாய் தாக்குதல் செய்தார். எங்களோடு வந்த தந்தை லா-கோம்பே அவர்கள் வெர்ஸில் மாகாணத்திற்குப் போக ஆயத்தம் செய்து கொண்டிருந்த வேளையில், நானோ டூரின் பட்டணத்திலுள்ள 'மர்சியானஸ்' மாளிகையில் தங்கினேன். இச்சமயத்தில்தான் என் சொந்த குடும்பத்திலிருந்தும், ஜெனிவா பிஷப்பிடமிருந்தும், 'பர்னபைட்ஸ்' என அழைக்கப்படும் மார்க்க தலைவர்களிடமிருந்தும், வரிசையாக பல்வேறு தீமையான குற்றச்சாட்டுகள் என்மீது தொடுக்கப்பட்டன.*

*இச்சமயத்தில், என் மாமியார் இறந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, டூரின் நகரத்திலிருந்த என்னைப் பார்க்க, என் மகன் வந்தான். அப்போதுதான், என்னைச் சூழ இன்னும் அதிகமான துன்பங்கள் உண்டாகியிருந்ததை என் மகன் மூலமாய் கேட்டு வருந்தினேன். என் மாமியார் மரித்துவிட்ட அவ்வேளையில், என்னைக் கேட்காமலே என் மாளிகையிலுள்ள அசையும் பொருட்கள் யாவும் விற்கப்பட்டு விட்டன என அறிந்தேன்! எனக்கு கார்டியனாக இருந்தவர்களும் மாளிகையின் அனைத்து பொருட்களையும் விற்பதற்கு உடந்தையாய் இருந்தார்கள்! என் உறவினர்களில் ஒருவராகிலும் என்னை ஒரு பொருட்டாய் எண்ணாமல் 'என்னைப் பாராமுகமாய்' தள்ளி வைத்துவிட்டார்கள். என் மாளிகையிலிருந்து நான் வெளியே சென்றுவிட்டபடியால், நான் திரும்பி வந்து என் உடைமைகளை அனுபவித்திட தகுதியற்றவளாக நியாயப்படுத்தி விட்டார்கள்!*

*எனக்கு ஏற்பட்ட அனைத்து துன்பங்களையும், நிந்தைகளையும் நேருக்கு நேராய் கண்ணுற்ற 'மார்சியானஸ்' என்னை விகற்பமாயும், அன்பு குறைந்த நிலையில் என்னைப் பார்க்கவும் தொடங்கினார்கள். இந்த இக்கட்டு வேளையில் "ஒரு குழந்தையைப் போன்ற மாசில்லாத இருதயத்தோடு" நான் வாழும்படி, ஆண்டவரிடமிருந்து கற்றுக்கொண்டிருந்தபடியால் 'மார்சியானஸ்' மனநிலை மாற்றத்தினால் நான் பாதிக்கப்படாதபடி, கர்த்தர் என்னைப் பாதுகாத்துக் கொண்டார். அந்த சமயத்திலும், நான் யாருக்காவது செய்திடும் உதவியை நிறுத்திக்கொள்ளவில்லை! அதுபோலவே, நான் தேவனுக்கென்று செய்து கொண்டிருந்த பணிகள் யாதொன்றும் தடைபடவுமில்லை!*

**"நான் பலமுறை 'ஒரு குழந்தையின் இயலாத தன்மைக்குள் பிரவேசித்துப் பழகியபடியால்' அதன் மூலமாய் தேவன் எனக்கு வழங்கிய திவ்ய பெலனை அனுபவித்து, என் ஜீவியத்தில் முன்னேறிச் சென்றிட வெளிச்சத்தைப் பெற்றிருந்தேன்!**

*நான் 'மார்சியானஸ்' மாளிகையிலிருந்த காலமட்டும், அவர்கள் குடும்பத்தில் நடந்த நிகழ்வுகள், அவருடைய மகளுக்கு ஏற்பட்ட சம்பவங்கள், ஆகிய யாவற்றிலும் தேவன், ஓர் மிகப்பெரிய விடுதலை உண்டாக்கியதையும்,* **தேவன் என்னோடுகூட இருந்ததையும் மார்சியானஸ் காணும்படி அவருடைய கண்கள் திறக்கப்பட்டது!** *அதுமுதல், முன்பு இருந்ததைவிட அதிகமான சிநேகத்தை என்மீது காட்டத் துவங்கினார்கள்:*

> ***எ****னக்கு ஏற்பட்ட நிந்தையை அவமானமாக அவர்கள் கண்ட அசம்பாவிதம், ஓர் மானிட அடிமைத்தனமான 'சுய அன்பு' எவ்வாறு என்மீது அவர்கள் முதலில் கொண்டிருந்த தெய்வ அன்பை மேற்கொண்டு விட்டதை, அவர்கள் உணர்ந்து கொண்டார்கள்! மேலும், அவர்கள் தங்களின் உண்மையான ஆவிக்குரிய நிலையைவிட தன்னை உயர்வாய் எண்ணிக்கொண்டிருந்ததையும், ஆனால் 'தெய்வீக அன்பிற்கு' சோதனை வந்த பின்புதான், தன்னுடைய குளிர்ந்த ஆவிக்குரிய பின்னடைவை உணரவும் தொடங்கினார்கள். நான் டூரின் நகரத்திற்கு வந்து* **மார்சியானஸ்** *மாளிகையில் தங்கியதை, ஓர் ஆவிக்குரிய நலமாக கர்த்தர் மாற்றி அமைத்ததைக் கண்டு நான் மகிழ்ச்சியடைந்தேன்!*

*ஆம், மார்சியானஸ் சகோதரி, மனுஷீக அன்பின் சுயத்திலிருந்து தூக்கியெடுக்கப்பட்டு, மாறாத 'தெய்வ அன்பை' கண்டடைந்தார்கள்!*

*- மேடம் குயான்*

## ‘ஆராதனையில்’ மாம்ச உற்சாகமா? ஆவிக்குரிய உற்சாகமா?

*உயிரற்ற ஆராதனையை கர்த்தர் புறக்கணிப்பார்*

நம்முடைய ஊழியத்தில் மாத்திரமல்ல, நமது ஆராதனைகளும் பரிசுத்த ஆவியின் பலத்தோடே செய்யப்பட வேண்டும் என்பது தேவனுடைய சித்தம். நாம் எப்படி ஆராதிக்க வேண்டுமென்று பிதாவானவர் தமது குமாரன் மூலமாய் சொல்லி அனுப்பியிருக்கிறார். “தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டுமென்றும், தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்” என்றும் இரட்சகர் சொன்னார் (யோவான் 4:24).

நம்முடைய ஜெபங்களுமேகூட ஆவியின் பலத்தோடுதான் செய்யப்பட வேண்டும். “ஆவியினாலே ஜெபம் பண்ணுங்கள்” “**பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணுங்கள்**” என்றே வேத வசனம் வலியுறுத்துகிறது (எபே.6:18; யூதா 20). சில சமயங்களில், நம்முடைய இருதயத்தை அநேக காரியங்கள் வந்து நெருக்க, ‘நான் என்ன சொல்லுவேன் ஆண்டவரே?’ என்று நாம் கலங்குகிறதுண்டு. நம்முடைய இருதயத்தின் தவிப்பை வார்த்தைகளில் விவரிக்க கூட முடிகிறதில்லை. “இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது நான் என்ன சொல்லுவேன்?” என்று நம்முடைய எஜமான் கலங்கினதுபோல் நாமும் கலங்க நேரிடலாம். அப்படிப்பட்ட தருணங்களில், **ஆவியானவரே நமக்கு உதவி செய்கிறார்.** “நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால் ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்” (ரோமர் 8:26).

நம்முடைய சங்கீதங்களும், பாட்டுகளும், கீர்த்தனைகளும், **ஆவியின் பலத்தோடே பாடப்படவேண்டும்.** “நீங்கள் ஆவியினால் நிறைந்து சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக்கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடி கீர்த்தனம் பண்ணுங்கள்” (எபேசியர் 5:19).

> “
> அப்போஸ்தலனாகிய பவுல், தம்முடைய சொந்த அனுபவத்தைக் குறித்து: “**நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன் கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன் கருத்தோடும் பாடுவேன்**” என்கிறார் (1கொரி.14:15). முதலாவது ‘ஆவியின் நிறைவு இல்லாமல்’ உங்கள் கருத்தில் ஜீவன் உண்டாக வழியில்லை! இவ்விதமாய் நம்முடைய சபைகளில் நடந்துவரும்

**ஆராதனைகள் தேவ ஆவியின் பலத்தோடே நடத்தப்படுமானால் எவ்வளவு மகிமையாயிருக்கும்!**

*சில வருஷங்களுக்கு முன்பு, ஓர் இரவில் சில சகோதரர்கள் ஒருமனப்பட்டு, ஒருவீட்டில்கூடி ஆவியானவரால் நிறைந்து, கர்த்தரைப் பாடி, ஜெபித்துக்கொண்டிருந்தார்கள். இதைப் பார்க்கும்படி ஒரு மனுஷன் அவர்கள் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான். இவர்கள் அவனுக்குப் பிரசங்கிக்கவுமில்லை, அவனுக்காக ஜெபிக்கவுமில்லை.* **தேவ ஆவியானவரின் வல்லமை** *அவனை மேற்கொள்ள, அவன் பாவ உணர்வடைந்து, முகங்குப்புற விழுந்து தேவ இரக்கத்துக்காகக் கெஞ்சினான்! அப்பொழுது அவனை அவர்கள் சேர்த்துக்கொண்டு, இரட்சிப்பின் வழியை அவனுக்கு விவரித்து காண்பித்தார்கள். இப்படி நடக்கக்கூடுமென்று கர்த்தருடைய வசனமும் கூறுகிறது. "எல்லாரும் தீர்க்கதரிசனம் சொல்லுகையில் அவிசுவாசியொருவன் அல்லது கல்லாதவனொருவன் உள்ளே பிரவேசித்தால்,* **அவன் எல்லாராலும் உணர்த்துவிக்கப்பட்டும்** *(கூடிவந்திருந்த அனைவருமே, ஆவியில் நிறைந்திருந்தார்கள்) எல்லாராலும் நிதானிக்கப்பட்டுமிருப்பான். அவனுடைய இருதயத்தின் அந்தரங்கங்களும் வெளியரங்கமாகும், அவன் முகங்குப்புற விழுந்து தேவனைப் பணிந்துகொண்டு தேவன் மெய்யாய் உங்களுக்குள்ளே இருக்கிறாரென்று அறிக்கையிடுவான்" (1கொரி.14:24,25). ஆ, இதுவே சபை முன்னேறிச் செல்ல வேண்டிய ஆவிக்குரிய நிலை!*

"

**நம்முடைய ஆலயத்தில் ஆவியானவருக்கு இடமில்லையென்றால், நம்முடைய ஆராதனைகளில் உயிர் இராது. பிரசங்கத்தில் உயிர் இராது. ஜெபத்தில் உயிர் இராது. வேத வாசிப்பில் உயிர் இராது. பாட்டுகளில் உயிர் இராது. ஆமென் என்று சொல்லக்கூட சக்தியிராது!**

*எல்லாம் தூக்கமும் அசதியுமாகவேயிருக்கும். ஆவியைப்பெற்ற யாராகிலும் ஒருவர் உள்ளே வந்தால், ஏன் இந்த சபைக்கு வந்தோமென்று, முடியும் வரையில் துக்கத்தோடிருப்பார்! இப்படியிருக்க, அவிசுவாசியொருவன் உள்பிரவேசித்தால், அவன் எப்படி உணர்த்தப்படுவான்? தேவன் மெய்யாய் இவர்களுக்குள்ளிருக்கிறார் என்று அவன் எப்படி அறிக்கையிடுவான்? அது, கூடாதகாரியம்!* **தூக்கம் பிடித்த ஆராதனை செய்வதைவிட, ஆலயத்தைப் பூட்டிவிட்டு சும்மாயிருப்பது நல்லது!** *உண்மையற்ற கடமை ஆராதனைகள் ஆண்டவருக்கு முழுவெறுப்பு! ஒருவேளை நம்முடைய ஆராதனைகள் உற்சாகமாய் நடக்கிறதினால் அவைகள் ஆவியின்*

ஆராதனை என்று நம்மை வஞ்சித்துக்கொள்ளவுங்கூடாது.

நமக்கு அலங்காரமான ஆலயமிருக்கலாம்! ஆராதனை முறை சிறப்பாய் நடக்கலாம்! பாடகர்கள் இனிய இசைக் கருவியோடு சேர்ந்து பாட்டுகளை இனிமையாகப் பாடலாம். இவைகள் யாவும் நல்லதே! **ஆனாலும் ஆவிக்குரிய உற்சாகம் வேறே, மாம்ச உற்சாகம் வேறே!** ஆவியைப் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு ஆராதனை செய்யத் தெரியாதென்று யார் சொல்லக்கூடும்? தேவகாரியங்களில், இந்த மாம்சம் எவ்வளவோ உற்சாகத்தைக் காட்டுகிறதே! இப்படிப்பட்ட உற்சாகம், ஆவியைப் பெற்றுக்கொள்ளுமுன்னும் தங்களுக்கு இருந்ததாகவும், தேவன் இன்னாரென்று அறியாமலே அவரைத் தொழுது கொண்டு வந்ததாகவும், அநேகர் அறிக்கை செய்திருக்கிறார்கள்!

அன்று, எருசலேம் தேவாலயத்தைவிட சிறப்பான ஆலயம் இருந்ததில்லையே? அதின் முடிவு என்னமாயிற்று? அவர்களுடைய ஆராதனையில் ஆவியுமில்லை! உண்மையுமில்லையே! சபையும், கர்த்தரை தொழுதுகொள்ள சபைக்கு வரும் மக்களும், விழிப்படைவார்களாக! இனிவரும் நாட்களில் உங்களின், உங்கள் சபையின் "செத்த நிலைகொண்ட" ஆராதனை, உயிர் மீட்சி அடைவதாக! ஆமென்.

- பரமானந்தம் ஐயர்

---

## குருவின் 'எளிமை அடிச்சுவடை' பின்பற்றுவோமாக!

*எளிமையில் வலிமை காணும் கர்த்தர்*

"**கீ**ப்" என்று ராஜஸ்தான் மக்களால் அழைக்கப்படும் ஒரு தாவரம் ஏழை மக்களின் "ஏர்-கண்டிசன்" செடியாகும். ஏழை மக்கள் இந்த செடிகளைக் கொண்டே தங்கள் குடிசைகளை வேய்ந்து மூடுகின்றனர். செடிகளை வெட்டி உலர்த்தி, அந்த காய்ந்த செடிகளைத்தான் பயன்படுத்துகின்றனர். பாலைவனத்தில் கடும் வெப்பம் வீசும்போது இந்த செடிகளால் உருவாக்கப்பட்ட வீடு "குளு குளு"வென்று இருக்குமாம்!

பாலைவனத்திலே அற்பமாக எண்ணப்படும் ஒரு புறக்கணிக்கப்பட்ட தாவரத்தில், எந்த ஒரு அழகும், கவர்ச்சியுமற்ற ஒரு குச்சி செடியில், அன்பின் தேவன் எத்தனையான ஒரு பயனையும், ஏழை எளிய மக்கள் மனம் மகிழ்ந்து களிகூரும் ஆனந்தத்தையும் மறைத்து வைத்துள்ளார் பார்த்தீர்களா? கர்த்தாவின் ஞானத்தை என்னவென்று சொல்லுவது!

“ எளிமையான தோற்றம், எளிய உடை, வாழ்க்கையின் ஏழ்மை பின்னணியத்தைக் கொண்டு தேவ மக்களை அற்பமாக எண்ணிவிடக் கூடாது!

*தலைமயிர் தாடியை வளர்த்துப்போட்டுக் கொண்டு, எளிமையான ஒட்டக மயிர் உடை தரித்து, தன் அரையிலே வார்க்கச்சையை கட்டி, யூதேயாவின் வனாந்திரங்களில் சுவிசேஷம் அறிவித்த யோவான் ஸ்நானகன், பார்வைக்கு அசட்டை பண்ணப்பட்டவராக அவமதிக்கப்பட்டிருக்கலாம்! ஆனால், சர்வ வல்ல தேவன் அவரைக் குறித்து “ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான் ஸ்நானகனைப் பார்க்கிலும்* **பெரிய தீர்க்கதரிசி** *ஒருவனுமில்லை” (லூக்கா 7:28) என்று சாட்சி கொடுப்பதையே நாம் காண்கின்றோம்.*

*கவர்ச்சி, அலங்காரம், பராக்கிரமம், மிகுந்த வீரியம் எல்லாம் தேவன் விரும்புகிறதில்லை. ஈசாயின் குமாரன் எலியாபின் (தாவீதின் அண்ணன்) வாட்டசாட்டமான தோற்றம், சரீரத்தின் கெம்பீரமான வளர்ச்சி, முகத்தில் காணப்பட்ட பராக்கிரமத்தின் வலிமை, ஆகிய எல்லாம், மாபெரும் தீர்க்கன் சாமுவேலைக்கூட ஒரு கணம் திக்குமுக்காடச் செய்தது. ஆனால், தேவனோ “நான் இவனை புறக்கணித்தேன்” (1சாமு.16:6,7) என்று எடுத்த எடுப்பிலேயே வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்பதாக உறுதியுடன் கூறிவிட்டார். ஆம், அன்றும் இன்றும் ஆட்டு இடையனின் உடை உடுத்தியிருந்த தாவீதும், எளிமையான ஒட்டகமயிர் உடை தரித்த யோவான் ஸ்நானகனுமே தேவனுக்கு பராக்கிரமர்கள்!!*

*- கிறிஸ்டோசன்*

---

## விவாகரத்தா? மறுமணமா? அது, கிறிஸ்தவமல்ல!

*வேதத்தைப் புரட்டும் சபைகளுக்கு விலகி நில்லுங்கள்*

“**த**ள்ளுதற் சீட்டைக் கொடுத்து (Divorce Certificate) *மனைவியைத் தள்ளிவிடலாமென்று மோசே ஏன் கட்டளையிட்டார்?” என்ற கேள்விக்கு, இயேசு தந்த உடனடியான பதிலே, இன்றும் மாறாததாயிருக்கிறது (மத்தேயு 19:7). அவர் சொன்னார்* **“உங்கள் இருதயக் கடினத்தினிமித்தமே மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார் (கட்டளையாக சொல்லவில்லை) என்றும், ஆதி முதலாய் அப்படியிருக்கவில்லை”** *(வச.8) எனவும் உறுதிப்படுத்தினார்!*

*முந்திய மத்தேயு 18-ம் அதிகாரத்தின் பின்பகுதியில், விவாகரத்துக்குரிய சத்தியத்தை விளக்கும்படி “பரலோக இராஜ்ஜியம்*

தன் ஊழியக்காரரிடத்தில் கணக்குப் பார்க்க வேண்டுமென்றிருந்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது" (வசனம் 23) என்ற உவமையை கூறினார்! அந்த உவமையில், பதினாயிரம் தாலந்து (ரூ.3,000 கோடி) கடன்பட்ட தன் ஊழியக்காரன் தாழ விழுந்து விண்ணப்பித்தவுடன், அவன் எஜமான் "மனது இரங்கி" அனைத்து கடனையும் மன்னித்து விடுதலையாக்கி விட்டான்! (வசனம் 27). அந்த எஜமான் மன்னித்த மாட்சிமையை கவனித்தீர்களா? "அவனையும் அவன் பெண்ஜாதி பிள்ளைகள்" அத்தனை பேரையும் விற்றுத் தீர்க்க வேண்டிய கடன்!

*க**வனியுங்கள் கணவன்மார்களே "உங்கள் பெண்ஜாதியின்" கடனையும் சேர்த்து மன்னித்துவிட்டாரே! அப்படியிருக்க, உங்கள் உடன்வேலைக்காரன் (உடன் வாழ்க்கைத் துணைவி) "உங்கள் காலில் விழுந்து என்னிடம் பொறுமையாயிரும்" என மனந்திரும்பி கெஞ்சினால், உங்கள் கடன் ரூ.3,000 கோடி மன்னிக்கப்பட்டிருக்க, அவளுக்கு நீங்கள் மன்னிக்காமல், அவளுடைய வெறும் ரூ.50,000 கடனுக்காக, அவள் தொண்டையை நெறித்து 'விவாகரத்து' ஜெயிலில் அடைத்துப்போடுவது சரிதானா? என்று கூறிய எஜமானன், அந்த கணவனைப் "பொல்லாத ஊழியக்காரனே!" என அழைத்து வெகுவாய் துக்கமடைந்தான்! ஆகவே 'இப்போது' அவன் பெண்ஜாதியையும் சேர்த்து சிறையில் போடாமல் "கடின இருதயம் கொண்ட கணவனை மாத்திரமே" சிறையில் அடைத்தான்! (வசனம்.28-34).*

அடுத்து வரும் மத்தேயு 19-ம் அதிகாரம் "இயேசு இந்த வசனங்களைச் சொல்லி முடித்த பின்பு...." என தொடருகிறது! அங்கு வந்த கடின நெஞ்சம் கொண்ட பரிசேயர்கள் "புருஷனானவன், தன் மனைவியை **எந்த முகாந்திரத்தினாலாகிலும்** தள்ளிவிடுவது சரிதானா?" என கேட்டார்கள் (வசனம் 3).

"
**இயேசுவானவர் "மனைவியை வேசித்தன முகாந்திரமேயன்றி...." என கூறியிருக்க, இவர்களோ "எந்த முகாந்திரத்தினாலாகிலும்...." என கேட்டதைப் பாருங்கள்! அவள், கற்பு நெறி கொண்ட மனைவியாயிருந்தாலும் 'ஏதோ சில பிடிக்காத காரியத்திற்காக' விவாகரத்து செய்திடும் கொடுமைகள்தான் இன்று எங்கும் காணப்படுகிறது! மனுஷர்களுடைய இருதயம், காலங்கள் செல்லச் செல்ல, அத்தனை கடின இருதயமாய் மாறிப்போவதைப் பாருங்கள்!**

எந்த முகாந்திரமானாலும், ஏன் அது வேசித்தன முகாந்திரமானாலும், தன்னிடம் மனம்திரும்பி மன்னிப்பு கேட்டிடும்

மனைவியை, கிறிஸ்து கூறிய உவமையைப்போல் 'மனம் இரங்கி' ஏற்றுக்கொள்வதன்றோ, நம் எஜமான் கற்றுத் தந்த மன்னிப்பின் மாண்பு! ஓர் விசுவாசியான கணவன் தன் மனைவியை தள்ளிவிட விரும்பிய பட்சத்தில், வேறு முகாந்தரத்தைவிட "வேசித்தன முகாந்திரமே" சிறந்த வழி என, அந்தப் பழியை அவள் மீது துணிகரமாய் போடுவதும் இன்று வழக்கமாகிவிட்டது!

ஆனால், ஆண்டவர் இயேசு, திருக்குள்ள மனிதனின் இருதயத்தை அறிந்து "தன் மனைவியை தள்ளிவிடுகிற எவனும், தள்ளுதற் சீட்டை அவளுக்கு கொடுக்கக்கடவன்!" என்றல்லவா தெளிவுபடுத்தினார்! (மத்.5:31). அதாவது, கணவன் கூறும் **'வேசித்தன முகாந்திரத்தை' மனைவியும் ஒத்துக்கொள்ளக்கூடியதாய்** இருக்க வேண்டும். அப்போது மாத்திரமே, அந்த மனைவி 'இரக்கம் மறுத்த' தன் கணவனிடமிருந்து, வருத்தத்தோடு தள்ளுதற் சீட்டை (விவாகரத்து முடிவை) அவளும் ஏற்றுக்கொள்ள முடியும்!

எத்தனையோ குடும்பங்களில், தன் கணவனின் வேசித்தனத்தை அறிந்த பின்பும்கூட, தன் குடும்ப சமாதானத்திற்காக "ஜெபம் மாத்திரமே செய்து" தன் வேசித்தன கணவனை ஆதாயம் செய்து கொண்ட ஏராளமான நிகழ்ச்சிகளை நம்மில் அனேகர் அறிந்திருக்கிறோமல்லவா!

யோவான் 8-ம் அதிகாரத்தில், விபச்சாரத்தில் பிடிபட்ட ஒரு ஸ்திரீயை, பரிசேயரும் 'வேத சாஸ்திரிகள்' முதற்கொண்டு, இயேசுவிடம் கொண்டு வந்து நிறுத்தினார்கள்! கல் நெஞ்சம் கொண்ட அவர்கள், அவளின் "மனந்திரும்பிய துக்கத்தை" பொருட்படுத்தாமல், தங்கள் கைகளில் கல்லை ஏந்தி, அவள் மீது எறிந்து கொன்றிட ஆயத்தமாய் இருந்தார்கள்! ஆனால் இயேசுவோ "இவள் போன்ற பாவமில்லாதவன், முதலாவது கல்லை இவள்மீது எறியக்கடவன்" எனக்கூறியதும், அங்கு சூழநின்ற அந்த பெரியோர்கள் தொடங்கி, ஒவ்வொருவராய் போய்விட்டார்கள்! பாருங்கள், வேதம் போதிக்கிறவர்களிடத்தில் ஒளிந்திருந்த 'வேசித்தனத்தை' இயேசு, ஒளியில் கொண்டு வந்துவிட்டார்! (யோவான் 8:3-9). மனந்திரும்பிய அந்த வேசியான ஸ்திரீயை இயேசு மன்னித்த மாண்பு அல்லவோ, நமக்கும் வேண்டும்!

> "
> **இவ்வாறு "மனைவியைத் தள்ளிவிட்டு, வேறொருத்தியை விவாகம் பண்ணுவதும், அந்த புருஷனால் தள்ளப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும், விபச்சாரம் செய்கிறான்" எனக்கூறும் லூக்கா 16:18 கூறும் வேத கட்டளையை, ஒருவனும் ஒருக்காலும் மாற்றிவிடக்கூடாது**

என்பதற்காகவே, முந்தையை 17-ம் வசனத்தில் "வேதத்தில் ஒரு எழுத்தின் உறுப்பு அவமாய்ப் போவதைப் பார்க்கிலும், வானமும் பூமியும் ஒழிந்துபோவது எளிதாயிருக்கும்" என்ற தேவ முத்திரையை இயேசு பதித்தார்!

*ஒரு சமயம், கைக் குழந்தையோடு இருந்த பக்தியுள்ள மனைவியை, ஒரு விசுவாச கணவன் துன்புறுத்திய வேளையில், அந்தப் பெண்ணின் தகப்பன் மிகவும் பயந்துபோனார்! அது ஏனென்றால், "ஒருவேளை, தன் மகளை அந்த கணவன் விவாகரத்து செய்துவிடுவானோ?" என்ற பயம்! "இப்படியெல்லாம் அந்த தகப்பன் பயப்படத் தேவையில்லை" என சிலர் அறிவுறுத்தியபோது, அந்தப் பெண்ணின் தகப்பன் கூறியது என்ன தெரியுமா? "இல்லை, என் மருமகன் போகும் சபை போதகர் தன் சபையிலுள்ள சில பணக்கார புருஷர்களுக்கு விவாகரத்து செய்து, மறுமணமும் செய்து கொடுத்திருக்கிறார். ஆகவே, அவர்கள் சபையில் 'விவாகரத்தும், மறுமணமும்' மிக சாதாரணமாகவே செய்து வைக்கப்படுகிறது" என உள்ளம் வெதும்பினார்!*

*"விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாய்" இருக்க வேண்டும் என வேதம் கூறுகிறதே! 'பரிசுத்த விவாக மஞ்சம்' இன்று மனைவி, நாளை வேறொருத்தி என அசுசிபடுத்துவது நியாயமோ? வேத வாக்கியத்தை தங்களுக்கு ஏற்றபடி வளைத்திடும் "வேசிக்கள்ளரையும், விபச்சாரக்காரரையும், தேவன் நியாயம் தீர்ப்பார்" என்று கூறும் எபிரெயர் 13:4-ம் வசனம் அவபக்தியாய் மாறிவிட்டது, சபைக்கு ஏற்பட்ட சஞ்சலமல்லவா?*


"இந்த சந்ததி, விபச்சார சந்ததி!" (மத்.12:39) என இயேசு வருந்தியது போன்ற சபைகளில் 'கண்டும் காணாமல்' தாபரிப்பது, அவர்களின் பிள்ளைகளையும் பிள்ளைகளின் பிள்ளைகளையும் சந்ததி சந்ததியாய் பாதிக்குமல்லவா? எங்காவது, தெய்வ பயத்தோடு வேத வாக்கியத்தை கைக்கொண்டு போதிக்கும் உத்தம தேவ சபைகளைத் தேடி, அங்கு உங்கள் குடும்பம் தாபரமாயிருக்கச் செய்திடுங்கள்!

மல்கியா 2:15 குறிப்பிடும் "தேவ பக்தியுள்ள சந்ததியாய்" நீங்கள் தளைத்தோங்க, மல்கியா 1:11 கூறும் "அவருடைய நாமத்திற்கு சுத்தமான காணிக்கை செலுத்திட நாடும்" சபையில் நிலைத்திருந்து வாழுங்கள்! அப்போதுதான், உங்கள் சந்ததி ஆசீர்வதிக்கப்பட முடியும்! ஆமென்.

*- T.ரத்தினகுமார்*

## எகிப்துதேச கிறிஸ்தவ உத்தம துறவி

# அந்தோணி



கி.பி. 251-ம் ஆண்டு பிறந்த புனித அந்தோணி.அபாட் உத்தம கிறிஸ்தவராய் புனித வாழ்க்கையை தொடங்கி, பாலைவனத்தை தேடி, அங்குதான் கிறிஸ்துவின் தியானத்தில் வளர்ந்தார். கிறிஸ்துவின் தெய்வீக தன்மைக்கு ஏற்பட்ட நிந்தையை தைரியமாய் எதிர்த்து நின்று போராடினார். பாலைவனத்தின் தனிமை தியானத்தில் கர்த்தரோடு நெருங்கி வாழ்ந்த அவருடைய ஜீவியம், புனித அகஸ்டியனும் அவரைப் போன்ற வாழ்க்கை வாழ தூண்டியது. பிற்காலத்தில் "ஓர் துறவற சமுதாயத்தையும்" உருவாக்கினார்.

மிகுந்த ஐசுவரியம் கொண்ட பெற்றோர்களிடம் வாழ்ந்த அவர், ஒரு நாள் மத்தேயு 19:21-ம் வசனத்தை சபையில் கேட்டு "நீ பூரண சற்குணராயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்தருக்குக்கொடு, அப்பொழுது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா" என்ற வசனத்தின்படியே வாழ ஒப்புக்கொடுத்துவிட்டார். தன்னுடைய எல்லாவற்றையும் துறந்து, தன் ஒழுக்கமான ஜீவியத்திற்கு ஓர் தோட்டத்தை, பராமரித்து, அதோடு சேர்த்து பனைமரத்து பாய்களையும் பின்னல் செய்து எளிய வாழ்க்கை வாழ்ந்து வந்தார். துறவறத்தில் பிரவேசித்த அவர், தனக்குள் பொல்லாத குணங்கள் ஏராளம் இருப்பதைக் கண்டு "எனக்குள் வாசமாயிருந்த அந்த குணங்களை பேய்களாகவே பாவித்து, அவைகளைத் தீவிரமாய் எதிர்த்து தேவ கிருபையால் ஜெயம் பெற்றேன்" என கூறினார்.

இதன் பிறகு, பிசாசு அவர் மீது பாலிய எண்ணங்களையும், சோம்பேறித்தனத்தையும், சோர்வையும், வாரி இரைத்தான். மீண்டுமாய் தன் ஒழுக்கமுள்ள வாழ்க்கையை ஸ்திரப்படுத்தி, ஜெபத்தின் மூலமாய் தன் விசுவாசத்தில் உறுதிப்பட நின்றார்! அவருடைய துறவற வாழ்க்கையும் தியான வாழ்க்கையும் சாத்தானுக்கு அச்சுறுத்தலாய் இருந்தபடியால், ஒருமுறை அந்த பாலைவனத்தில் பிசாசானவன் வெளிப்புற தாக்குதலை செய்து, குற்றுயிராய் அவரைத் தாக்கி, மரண விளிம்பிற்கு கொண்டு வந்து விட்டான். கர்த்தருடைய இரக்கத்தால், சபையில் உள்ள சில சகோதரர்கள் அவரை அந்த நிலையில் கண்டு, தேவாலயத்திற்கு அவரது உடலை தூக்கிச் சென்றார்கள். ஆச்சரியப்படத்தக்க வகையில், கர்த்தர் அவருடைய உயிரை பாதுகாத்தார்.

மீண்டுமாய் அவரது பூரண துறவறமும், தியான ஜீவியமும் பிசாசின் ராஜ்ஜியத்திற்கு அச்சுறுத்தலாய் இருப்பதைக் கண்டு, இந்த முறை அவரை எப்படியும் அழித்துவிட வேண்டும் என, கொடிய விலங்குகள் வடிவத்தில் அவரைப் பீறிபோட எத்தனித்தான். ஆனால் கர்த்தரோ, இந்த கொடிய நிகழ்ச்சியில் துணை நின்று, பூரண சுகத்தோடும், பிரகாசிக்கும் கண்களோடும், ஜெயமாய் கடந்து வர கிருபை செய்தார். பிசாசின் பல கொடிய நேரடி பல தாக்குதல்களையும் சந்தித்து துறவற ஜீவியத்தின் மூலமாய் அநேகரை ஆசீர்வதித்தார். திரளான ஜனங்கள் அவரிடம் வந்து, "அவர் கூறும் ஞான சொற்களை" கேட்டு ஆசீர்வதிக்கப்பட்டார்கள். பூரண சுகமுடையவராய் 105 ஆண்டுகள் வாழ்ந்து கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## வாலிபனே, உன் இருதயம் 'பொன் விளையும்' பூமியாகட்டும்!

"பொன் விளையும் பூமியில் வேறு எதுவும் விளையாது" என்று புவியியல் அறிஞர்கள் கூறுகின்றனர். அது எந்த அளவிற்கு உண்மை என்று எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று நிச்சயம், உலக நேசம் வளரும் ஒரு உள்ளத்தில் நன்மையான வேறு எதுவுமே விளைவதற்கு இடமே கிடையாது!

இந்த உலகத்தின் நேசமோ அல்லது, இந்த உலகத்தின் ஆதாயங்களோ அல்லது, இந்த உலகத்தின் கவலைகளோ அல்லது, இந்த உலகத்தின் ஆசை இன்பங்களோ நிரம்பியிருக்கும் ஒரு இருதயம் தேவனுடைய எந்த ஒரு ஆலோசனையையும் அவருடைய எந்த ஒரு புத்திமதியையும் ஏற்றுக்கொள்ள முற்றும் செயலிழந்து போய்விடும் என்ற எச்சரிக்கையை நாம் யாவரும் அறிந்திருக்கக்கடவோம்!

அது, தேவனையும் அவருடைய பரிசுத்தத்தையும் ஒரு பக்கமாக ஒதுக்கி வைத்துவிடும் இருதயம்! அநேகம் பிசாசுகளால் சூழப்பட்டதோர் இருதயம்! அப்படிப்பட்ட ஓர் இருதயம், பரிசுத்தம் என்ற மதுரமான தேன்கூட்டுத் துணிக்கையை அருவருப்பாக எண்ணி வெறுத்துத் தள்ளிவிடும் என்பதில் ஆச்சரியம் கொள்ளுவதற்கு ஒன்றுமே இல்லை!

அவ்வித உலக நேசத்தால் ஊறிப்போன இருதயம் பரிசுத்தத்தைப் பகடி பண்ணி, அந்த மேன்மையான பரிசுத்தத்தை மாபெரும் மதிகேடு என்று உதாசீனம் பண்ணுவதைக் காண்பது போன்ற, அத்தனை பெரிய ஆச்சரியமான காரியம் வேறொன்றுமில்லை என்றே கூறலாம்! அந்தப் பொல்லாத இருதயம் அதைத்தான் செய்யும். பரிசுத்தவான் 'தாமஸ் புரூக்ஸ்' மேல்கூறிய செய்தியின்படி, உங்கள் இருதயம் 'பொன் விளையும்' நல்ல இருதயமா? அல்லது கேடுபாடுகளும், தீய பழக்கங்களும் நிறைந்த 'கெட்ட இருதயமா?' என்பதை சோதித்தறிந்து, வாலிபனே, இன்றே உன் இருதயத்தை இரட்சகரிடம் திருப்பி, நல்ல இருதயமாய் நிலைத்து வாழ தீர்மானம் செய்வாயாக!

- சுவிசேஷ மலர்

பணம் அனுப்ப QR பயன்படுத்தவும்

maduraichristianfellowship@indianbk

பரலோக பொக்கிஷங்கள்

Published and Owned by:
Madurai Christian Fellowship, Regd Society,
*Editor* T.Rathnakumar, Madurai.
Printed by SFA Print (P) Ltd., Sivakasi.